2005 பிப்ரவரி 3]

கூறுகிறது. வருங்காலத்தில் அரசின் நிதிநிலைக்கேற்ப இத்திட்டம் முன்னுரிமை கொடுத்து செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை நான் 2001-லிருந்தே தொடர்ந்து வைத்து வருகிறேன். தயவுகூர்ந்து, அமைச்சர் அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையில் சேர்த்து, இந்த அணையைக் கட்டுவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கட்டப்படும் என்று சொல்கிறார். பிறகு ஏன் அமைச்சரைத் தொந்தரவு செய்கிறீர்கள்?

திரு. எஸ். தாமோதரன்: 2005-2006 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையிலே சேர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

31—

சார்நிலை துணைக் கருவூலம்

***2592—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பிரெட்டிப்பட்டி வட்டத் தலைமையிடத்தில், சார்நிலை துணைக் கருவூலம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) வேலைப் பளு, work load, குறைவாக இருக்கிற காரணத்தினாலும், போதிய பணியாளர்கள் அங்கு இல்லாத காரணத்தினாலும், பாப்பிரெட்டிப்பட்டி ஒரு வட்டத் தலைமையகமாக இருந்தபோதிலுங்கூட, அங்கு கருவூலம் அமைக்கின்ற செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

[2005 பிப்ரவரி 3

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991-1996-ல் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் அம்மா அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான் அரூர் வட்டத்திலிருந்து பாப்பிரெட்டிப்பட்டியைத் தலைமையிடமாக வைத்து புதிய வட்டமாக, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். அன்றிலிருந்து இன்று வரை 10 ஆண்டுகளாக, அந்தப் பகுதிக்கு ஒரு துணைக் கருவூலம் இல்லாத ஒரு சூழ்நிலை இருந்துகொண்டு வருகிறது. அதோடுமட்டுமல்லாமல் அருகிலே இருக்கக்கூடிய அரூர் துணைக் கருவூலத்திற்குச் செல்ல வேண்டுமென்று சொன்னால், அப்பகுதி மக்கள் 30 கிலோமீட்டரிலிருந்து 40 கிலோமீட்டர் தொலைவு சென்று அங்கே வரவு-செலவுக் கணக்குகளை வைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த நிதியாண்டில் நம்முடைய புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இந்தக் கோரிக்கையை ஏற்று, அப்பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, வட்டத் தலைமையிடமாக பாப்பிரெட்டிப்பட்டி இருப்பதால், அங்கே துணைக் கருவூலம் அமைப்பதற்கு நம்முடைய அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஒட்டுமொத்தமாக 203 கருவூலங்கள் தமிழகத்தில் இயங்கி வருகின்றன. இவற்றுள் வட்டத் தலைமையகம் இல்லாதபோதிலும், அங்கு கருவூலங்கள் இருக்கின்ற பகுதிகள் 23 பகுதிகள் இருக்கின்றன. வட்டத் தலைமையகம் இருந்தபோதிலும், கருவூலங்கள் இல்லாத பகுதிகள் 20 பகுதிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரூருக்கும் பாப்பிரெட்டிப்பட்டிக்கும் கிட்டத்தட்ட 40 கிலோமீட்டர் தொலைவு என்று கூறியிருக்கிற காரணத்தினால், அந்த அடிப்படையில் அரசு இதைப் பரிசீலனை செய்யும்.

திரு. பெ. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனை செய்யும் என்ற அறிவிப்பைத் தந்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசுக்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 32, திரு. என்.கே. பெருமாள், மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.